2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 5

## பயிற்சி 5

பெயர் ______________________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பேச்சுப் பயிற்சி**





- பனைமரம் உயரமாக வளரும்.
- இது விதையிலிருந்து முளைக்கும் வலிமையான மரமாகும்.
- இதற்குக் கிளைகள் இல்லை.
- இதன் இலையைப் பனை ஓலை என அழைப்பர்.
- பனை மரத்திலிருந்து நுங்கு, பனம்பழம் போன்றவை கிடைக்கின்றன.
- பனம் விதையிலிருந்து பனங்கிழங்கு பெறப்படுகிறது.
- காயவைத்த பனங்கிழங்கை ஒடியல் என்று கூறுவர். பனையின் பாளையில் இருந்து பெறப்படும் நீரைப் பதநீர் என்பர்.
- கருப்பநீரில் இருந்து பனங்கட்டி செய்யப்படுகின்றது.
- பனையோலைகளிலிருந்து நீற்றுப்பெட்டி, பெட்டி, உறி, சுளகு, கடகம், பாய், விசிறி போன்றவை இழைப்பர்.



- நீற்றுப்பெட்டியில் பிட்டு அவிப்பர்.
- உறியில் சட்டி, பானை அடுக்கிவைத்து அதற்குள் பொருட்களை வைப்பர்.
- பனைமரம் வீடுகட்டுவதற்கும் அதன் ஓலை வேலி அடைப்பதற்கும் பயன்படுகிறது.
- பனையின் இளையதை வடலி என்று கூறுவர். பழங்காலதில் பனை ஓலைகள் எழுதுவதற்குப் பயன்பட்டன. இதை ஏடு என்று அழைப்பர்.



ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் த

**2. வாசித்தல்**

## புலி

இயற்கை எண்ணற்ற உயிரினங்களைப் படைத்துள்ளது. அவை பறப்பன, நடப்பன, நீர்வாழ்வன எனப் பல வகையின. விலங்குகள் இயற்கை கொடுத்த கொடையாகும். இவை மாந்தர் வாழ்வோடு மிகவும் தொடர்புடையன. இவ்விலங்குகளில் புலி குறிப்பிடத்தக்கதாகும். புலிகளில் வேங்கைப்புலி, சிறுத்தைப்புலி, கரும்புலி எனப் பல வகையுண்டு. புலிகளில் முதன்மையானது வேங்கைப்புலியாகும். இது அஞ்சாமையும் வலிமையும் உடையது. மற்ற விலங்குகளைப் போன்று பிற விலங்குகள் வேட்டையாடியதை இது பறித்து உண்ணாது. தானே வேட்டையாடி உண்ணும். வேங்கைப் புலி பெரிய யானையையே எதிர்த்துத் தாக்கும் பலங் கொண்டது. தமிழீழத்தின் தேசியக்கொடி புலிக்கொடியாகும்.

**3. பாடச் சொற்கள் (பாடம் 5)**

புத்தாண்டு - New Year

ஆவல் - Eager

கரணியம் - Reason

வைகறை - Dawn

விருந்தோம்பல் - Hospitality

உழவர் - Farmer

இயற்கை - Nature

கூலங்கள் - Grains

புனைவர் - Wear

சுற்றம் - Neighbourhood

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**4. பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- இளங்கோ அடிகள் நெடுஞ்சேரலாதனுடைய _______________ மகன்.

  (மூத்த, இளைய, மூன்றாவது)

- இன்பத்திலும் துன்பத்திலும் _______________ உண்மை நட்பாகும்.

  (பிரிந்திருப்பதே, மறந்திருப்பதே, இணைந்திருப்பதே)

- மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய _______________ பற்றித் திருக்குறள் கூறுகிறது.

  (ஒழுக்கங்களைப், உணவுகளைப், ஆடைகளைப்)

- ___________________ அந்நாளில் கூத்து, நட்டம், நடனம் என அழைத்தனர்.

  (ஓவியக்கலையை, சிற்பக்கலையை, ஆடற்கலையை)

- இளங்கோ அடிகள் ___________________ எழுதினார்.

  (சிலப்பதிகாரத்தை, கொன்றைவேந்தனை, திருக்குறளை)

- நகுதல் என்ற சொல்லின் அர்த்தம் _______________.

  (அழுதல், சிரித்தல், புலம்புதல்)

- தை பிறந்தால் _______________ பிறக்கும்.

  (வலி, வழி, வளி)

- காலித்தல் என்ற சொல்லின் அர்த்தம் _______________

  (மறைதல், வீசுதல், தோன்றுதல்)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

- தைப்பொங்கலை ____________________ திருநாள் என்றும் அழைப்பர்.

(உழவர், உளவர், உலவர்)

- பழமொழி: ________________ கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

(ஓவியமும், நாட்டியமும், சித்திரமும்)

- பொங்கல் அன்று ________________ கோலம் இடுவர்.

(அறையில், முற்றத்தில், தட்டத்தில்)

- நரசிம்மபல்லவன் ________________ என்று அழைக்கப்பட்டான்.

(மாமல்லன், வீரமல்லன், சூரமல்லன்)

- நாங்கள் நேற்று ____________________.

(விளையாடுவோம், விளையாடினோம், விளையாடுகின்றோம்)

- மழை பெய்யும்போது வானம் ________________ இருக்கும்.

(கருமைக்கு, கருமை, கருமையாக)

- நாங்கள் எல்லோரிடமும் ________________ ப் பேசவேண்டும்.

(இனிமை, இனிமையாக, இந்நிமியாக)

- பல்+பசை என்பதை சேர்த்து எழுதினால் ________________ ஆகும்.

(பல்பசை, பல்ப்பசை, பற்பசை)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

5. **பாட வினாக்களுக்கு விடை தருக.**

- அறநூல்களில் மிகவும் சிறந்தது எது?

______________________________________________

______________________________________________

- மாமல்லன் என அழைக்கப்பட்ட பல்லவப் பேரரசன் யார்?

______________________________________________

______________________________________________

- தமிழருடைய பண்பாட்டிலே உயிரைவிட உயர்ந்தது எது?

______________________________________________

______________________________________________

- ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற கதையில் மான் ஏன் கவலைப்பட்டது?

______________________________________________

______________________________________________

- இளங்கோ எந்த நாட்டின் இளவரசன்?

______________________________________________

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**6. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதுவோம்.**

- சோறுக்கு அரிசி முதற் பொருள் ஆகும். (சோறு)
- தொழிலாளர் ____________________ வேலை செய்வர். (கூலி)
- குளம் ____________________ நிறைந்து இருந்தது. (நீர்)
- வாத்துகள் நீரில் ____________________. (நீந்து)
- தாமரை ____________________க் கண்டு மலரும். (கதிரவன்)
- நாம் பிறர் செய்த ____________________ மறக்கக்கூடாது. (உதவி)
- அம்மா நேற்று அங்காடியில் பல பொருட்களை (வாங்கு)

  ____________________.
- அவன் ____________________ இருந்து வந்தான். (ஈழம்)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5